முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1169

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.12.2022, ஞாயிற்றுக்கிழமை

1. வரம்பெற்று வந்த வள்ளலே
வாழுகின்ற ஞானியே ஆறுமுக அரங்கனே
வகைபட சுப்ரமணியர் யானும் உமக்கு
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 25 ம் நாள் 11.12.2022, ஞாயிற்றுக்கிழமை)
2. ஆசி தந்து உலகை மீட்கும்
ஆற்றல்மிக்க ஞான சக்தியாக
வாசி வென்று இந்த கலியில் அற்புதத்தை
வடிவேலன் என் சூட்சுமமாக அருள்புரிகின்றாய்
3. அருள்புரிகின்ற அரங்கனே இனி உந்தனுக்கு
ஆறுமுகன் என் பெருந்துணை உண்டுஉண்டு
பெருமளவில் உலகை தர்மவழி
பிசகின்றி மாற்றி உன் அவதாரமாக
வருமுலகில் உலக மாற்றத்தை
வல்லமைபட உன் ஆற்றலாலே நடத்துவாய்
4. நடத்தவே ஞானப் படைகளை
ஞானிகளாக்கும் வண்ணமாக
இடரின்றி தொண்டர்களை உருவாக்கி
இனிதே உயர் சேவையாற்றி வருகின்றாய்
5. வருகின்ற உன்வழி சரணாகதி கொண்ட
வல்லமைகொண்ட தொண்டர்கள் அனைவருமே
அனைவருமே என்னருளாலே ஆற்றல்பட ஞானிகளாக மாறி
மாற்றத்தை உலகம் எங்கும்
6. மகத்துவமிக்க ஞான ஆட்சியாக
மகான்கள் வெளிப்படும் ஞானச்சித்தர் காலமாக
ஆகவே மாற்றி அற்புதம்
அரங்கன் உன் அவதாரத்தால் நிகழும்
7. நிகழவே ஆறுமுகன் நித்தம் நித்தம்
நிலமதனில் உந்தனுக்கு சக்தியூட்டி வகைபட காத்துவருகின்றேன்
வல்லமைமிக்க ஞானி உன் கரம்கொண்டு வகையான தீட்சைபெறும் மக்களெல்லாம்
வல்லமைகூடி இந்த உலகமாற்றம் நிகழ்த்துவர்

வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–